# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, சரண பௌத்த (நிவாரண) மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, செத்தெம்பர் மாதம் 28 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 10.00** **தபாற் செலவு: ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, சரண பௌத்த (நிவாரண) மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ.கூட் 11/2004

### சரண பௌத்த (நிவாரண) மன்றத்தினைக் கூட்டிணைப்ப தற்கானதொரு சட்டம்

"சரண பௌத்த (நிவாரண) மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று வணக்கத்திற்குரிய நாக் குமுகமுவை சமண தேரரின் வழிகாட்டலுக்கமைய அக்கழகத்தின் விதிகளுக்கிணங்கப் பௌத்த சமய போதனைகளைப் பயனுறப் பரப்புவதற்காகவும், சொல்லப்பட்ட கழகத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காகவும் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருக்கின்றதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தக் குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, சரண பௌத்த (நிவாரண) மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

சரண பௌத்த (நிவாரண) மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சரண பௌத்த (நிவாரண) மன்றத்தில் தற்போது உறுப்பினராக உள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் கூட்டுத்தாபனம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) "சரண பௌத்த (நிவாரண) மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்

கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம், பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் கூட்டுத்தாபனத்தின் விருப்பத்திற்கேற்ப அதை மாற்றுவதற்குமான முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) பொதுமக்களின் நலன்கருதி கலாசார, சமூக, பொருளாதார, சமய, அபிவிருத்தியை ஊக்குவித்தல் ;

(ஆ) பௌத்த மதம் பற்றிய கற்கைகள் ஆராய்ச்சிகளை பொறுப்பேற்றல், நிறைவேற்றல் அல்லது அதற்கு அனுசரணையளித்தல் மூலம் புத்த பெருமானின் பௌத்த மத போதனை பற்றிய புரிந்துணர்வை ஊக்குவித்தலும் பரப்புதலும் ;

(இ) பேணிப்பாதுகாக்க வேண்டிய, நோயுற்ற, வயது முதிர்ந்த அல்லது வறிய பிக்குகளுக்கும், பொதுமக்களுக்கும் இயன்ற அளவில் தேவையான உதவி ஒத்தாசைகளைப் புரிதல் ;

(ஈ) பின்தங்கிய பிரதேசத்தில் வசிக்கும் வசதி குறைந்த பிள்ளைகளின் கல்வியை முன்னெடுக்கவும் திறமையை முன்னேற்றுவதற்காகவும் உதவி ஒத்தாசை புரிதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும் நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும் உள்நாட்டு மூலங்களிலிருந்தோ அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்தோ மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அந்நிதிகளை முதலீடு செய்யவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை சேவையிலீடுபடுத்தல், சேவைக்கமர்த்தல் அத்துடன் வேலை நீக்கஞ் செய்வதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கக்கூடிய

தத்துவம் உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது குறிக்கோள்களுள் ஒன்றை முன்னெடுத்துச் செல்வதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையத் தெரிவு செய்யப்படக்கூடியவாறான பதவி தாங்குநர்களையும் மற்றும் அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யக் கூடியவாறான அத்தகைய ஏனைய ஆட்களையும் கொண்ட முகாமைச் சபையொன்றினால் நிருவகிப்படுதலும் மற்றும் முகாமை செய்யப்படுதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற மன்றத்தின் நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாபனத்தின் விதிகளின்கீழ் புதிய முகாமைச் சபையொன்று நியமிக்கப்படுகின்றவரை பதவி வகித்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** (1) உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும், முகாமைச் சபையின் பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்து நியமிப்பதற்காகவும், கூட்டுத்தாபனத்தின் முகாமைச் சபையின் பதவிதாங்குநர்கள், பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர்கள் ஆகியோரினது கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாகவும் பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களை முகாமை செய்வதற்காகவும், அதன் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் காலத்துக்குக் காலம் உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும் அத்துடன் சமுகமளிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதேபோன்ற கூட்டத்திலும் மற்றும் அதேபோன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**7.** (1) முகாமைச் சபையானது, கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமை பெற்ற ஒரு கணக்காய்வாளரினால் அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கணக்காய்வாளர்களினால் வருடாந்தம் ஒரு தடவையாவது பரிசோதிக்கப்பட்டுக் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

மன்றத்துக்குக் கொடுக்குமதியாகவுள்ளனவும் செலுத்தற்பாலனவுமான கடன்கள்.

**8.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான மன்றத்தின் சகல கடன்களும், பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், மன்றத்திற்கு வருமதியான எல்லாக் கடன்களும், அதற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தானத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**9.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அன்பளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறு வகையாக கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும் சட்டத்தில் முறைப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை இடப்பட வேண்டிய முறை.

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் விதிகளால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களின் முன்னிலையில் அன்றி எந்தவொரு சாதனத்திலும் இடப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதலானது சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாயிருத்தலும் வேண்டும்.

கலைக்கப்பட்டதன் மேல் எஞ்சியிருக்கும் ஆதனம்.

**11.** கூட்டுத்தாபனம் ஒடுக்கப்பட்டதன்மேல் அல்லது கலைக்கப்பட்டதன்மேல், அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் கொடுத்துத் தீர்க்கப்பட்ட பின்னர் எத்தன்மைத்தான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது, ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடை செய்யப்பட்டுள்ளவையுமான வேறு நிறுவகத்திற்கு அல்லது நிறுவனங்களுக்கு கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்